ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

शक्यो वारयितुं जलेन हुतभुक्छूर्पेण सूर्यातपो
नागेन्द्रो निशिताङ्कुशेन समदो दण्डेन गौर्गार्दभः।
व्याधिर्भेषजसंग्रहैश्च विविधैर्मन्त्रैः प्रयोगैर्विषम्
सर्वस्यौषधमस्ति शास्त्रविहितं मूर्खस्य नास्त्यौषधम् ॥

அக்கினியின் உஷ்ணத்தை ஜலத்தால் மாற்றலாம். சூரியனுடைய ஆதபத்தை முறத்தால் விலக்கிவிடலாம். மதங்கொண்ட சிறந்தகரியை கூர்மையான அங்குசமென்னும் ஆயுதத்தால் ஸ்வாதீனம் செய்துகொள்ளலாம். வியாதிகளைப் பலவித மருந்துகளைக்கொண்டு நிவர்த்திக்கலாம். அதிக கோரமான விஷத்தையும் மந்திரப் பிரயோகங்களால் விலக்கலாம். எவ்விதமானகஷ்டங்களையும் பரிஹரிக்க சாஸ்திரீயமான ஔஷதம் ஏற்பட்டிருக்கிறது. மூர்க்கனுக்கு மாத்திரம் ஒருவிதமான மருந்தும் இல்லை.

மனிதர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பலவிதங்களிருக்கின்றன. அவற்றுள் எதுநேர்ந்தாலும் அதை விலக்கவேண்டிய பரிஹாரங்களும் சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கின்றன. நமக்கு ஏதாவது ஒரு கஷ்டம் நேர்ந்தால் அதற்குரிய பரிகாரத்தைச் செய்தால் அது விலகும். அப்படியிருந்தும், மூர்க்கனை அதர்வது, தானுமறிந்துகொள்ளாமலும்,பிறருடைய ஹிதமான வாக்கைக் கேளாமலும், தனக்குத் தோன்றியவாறு கெட்ட காரியங்களில் அறிவில்லாமல் பிரவேசிப்பவனைத் திருப்பி, நல்வழியில் கொண்டுவர யாதொரு பரிகாரமும் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. இதனால் மனிதன் மூர்க்கனாயிருந்தால் அதுவே பெரிய கஷ்டமென்றும், சிரமப்பட்டாகிலும் மூர்க்கத் தன்மையை விலக்க முயலவேண்டுமென்று ஏற்படுகிறது. சுபம்.

நமது தர்மம்.

11. ஏனைய மதஸ்தர்களைப்போல் நம்முடைய மதத்தில் ஏன் பிறரைச் சேர்த்துக்கொள்ளுகிறதில்லை.

இந்நான்கு வர்ணங்களும் ஈசுவராநுக்கிரகத்தினால் பிறப்பு மூலமாய் ஏற்படுவதால் இவைகளிற்பிறவாத ஒருவன் சூத்திர வர்ணத்தையோ, பிராம்மண வர்ணத்தையோ ஒன்றையும் அடையமுடியாது. அடையவேண்டில் மேற்சொன்ன சாமான்யதர்மங்களை சரிவர அநுஷ்டித்து ஈசுவராநுக்கிரஹத்தைப் பெற்று அடுத்த ஜன்மத்தில் மனோபக்குவத்திற்குத் தக்க ஓர் வர்ணத்தைப் பெறலாம்.

அன்றியும் வேதம் எல்லா மனிதர்களுக்குமுரிய பொது தர்மங்களையும் தன் குழந்தைகளுக்குப்போல் உபதேசித்திருப்பதால் அவர்கள் தங்களை வேறுமதமாக நினைப்பினும் நாம் ஒருவரையும் புறமதஸ்தர்களாக நினைக்கவும் வேண்டியதில்லை. இதனாலும் நம்மதத்தில் சேர்க்கத்தனிப்பிரயத்தனம் எடுத்துக் கொள்ளுகிறதில்லை.

12. ஈசுவரன் படைத்த நான்கு வர்ணங்களைத்தவிர, எவ்வளவோ ஜாதிகளும் ஜனங்களும் காணப்படுகின்றனவே அவர்கள் யார்?

ஸ்ருஷ்டிகாலம் முதல் எவ்வளவோ கோடிக்கணக்கான வருஷங்கள் ஆகியிருப்பதால் மத்யகாலத்தில் நான்கு வர்ணத்தார்களில் சுயதர்மங்களைக் கைவிட்டவர்களும், தத்தம் வர்ணங்களுக்குரிய விவாகத்தைவிட்டு பாபத்துக்கேதுவான விவாகங்களைச் செய்து அதினாலுண்டாகும் ஸந்ததிகளும் ஒரு வர்ணத்

திலும் சேர்க்கத் தகாத ஸங்கரஜாதிகள் ஆனார்கள். இந்த ஸங்கரஜாதிகளுக்குள்ளும் ஒன்றுக்கொன்று கலந்து சண்டாளர் முதலிய எண்ணிறந்த ஜாதிகள் ஏற்பட்டிருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவர்களெல்லாம் உலகமுழுவதும் பரவிநிற்கின்றனர். பொது தர்மங்களில் இவர்களனைவரும் அதிகாரிகள் தான்.

13. வேதம் எத்தனை?

ரிக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்று நான்குவேதங்கள் உள்ளன. ரிக்குவேதத்திற்கு சாகைகள் இருபத்தொன்றும் யஜுஸ்ஸுக்கு நூற்றொன்றும் ஸாமத்திற்கு ஆயிரமும், அதர்வணத்துக்கு ஒன்பதுமாம்.

14. ஒவ்வொரு சாகைக்கும் காண்டங்கள் எத்தனை?

கர்மகாண்டம் ஞானகாண்டம் என்று இரண்டு காண்டங்கள். கர்மகாண்டமானது, நமது புத்திக்கெட்டாத புண்ணிய லோகங்களையும் சித்தசுத்தியையும் கர்மயோகத்தையும் உபதேசிக்கிறது. இவ்விதம் கர்மயோகத்தினால் சுத்தியடைந்த ஆன்மாவுக்கு ஞானயோகத்தினால் மோக்ஷத்தையளிக்கும் உபநிஷத்துக்கள் என்ற வேதத்தின் முடிவான பாகத்திற்கு ஞானகாண்டம் என்று பெயர்.

15. இவ்வேதங்களின் உபவேதங்கள் எவை?

ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வவேதம், அர்த்தசாஸ்திரம் இவைகள் நான்குமாம்.

16. ஆயுர்வேதம் என்பது என்ன?

தர்மாநுஷ்டானத்திற்கு முதல் ஸாதனமான சரீரத்தை ரோகங்கள் பீடிக்காவண்ணம் காப்பாற்றவும், தபஸுக்காக ஆயிரக்கணக்கான வருஷங்கள் ஜீவிக்கவும், உபாயங்களைக் கற்பிக்கும் சாஸ்திரம். இது பிரமா, பிரஜாபதி, அசுவினிதேவதைகள், தன்வந்திரி, இந்திரன், பரத்வாஜர், ஆத்ரேயர், அக்நிவேசியர் இவர்களால் உபதேசிக்கப்பட்டு சரகமுனிவரால் ஸங்கிரகிக்கப்பட்டிருக்கிறது. இது ஸூத்ரம், சாரீரம், ஐந்திரியம், சிகித்ஸா, நிதானம், விகற்பம், ஸித்தி என்று எட்டு ஸ்தானங்க

ளுள்ளது. தற்காலத்தில் வழங்கப்படும் சரீரதத்துவசாஸ்திரம் ஓஷதி தத்துவசாஸ்திரம், ரஸாயனசாஸ்திரம், சஸ்திரசிகித்ஸை ஔஷதசிகித்ஸை இவைகள் இந்த ஆயுர்வேதத்தின் எட்டுஸ்தானங்களில் சில பகுதிகளாம்.

17. தநுர்வேதம் என்பது என்ன?

தர்மாநுஷ்டானத்திற்கு துஷ்டர்களால் கெடுதிநேராவண்ணம், க்ஷத்ரியர்களது தர்மமான யுத்தத்தை நடத்தவும், பிரஜைகளை சரிபாய்ப் பரிபாலனம் செய்யவும் சக்தியைக்கொடுக்கும் வேதம் தநுர்வேதம். இது விச்வாமித்ரமகர்ஷியால் செய்யப்பட்டது. இது தீக்ஷாபாதம், ஸங்கிரகபாதம், ஸித்தி பாதம், பிரயோகபாதம் என்று நான்கு பாதங்களடங்கியது. இந்த சாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஆயுதங்கள் முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம், யந்திரமுக்தம் என நான்குவகை. முக்தமாவது சக்ராயுதம் அஸ்திரம் முதலியது; அமுக்தம், கத்தி கதை முதலியன, முக்தாமுக்தம் விட்டெறிந்தாலும் சத்துருவையழித்து தானே திரும்பிவந்துசேரும் சல்லியபேதம் என்னும் ஆயுதங்கள். யந்திரமுக்தமாவது, அம்பு, சதக்னி முதலான பீரங்கிக்குண்டுகள் முதலியன. முக்தமாகிய அஸ்திரங்கள், பிரஹ்மாஸ்திரம், நாராயணாஸ்திரம், பாசுபதாஸ்திரம், பிரஜாபத்யஸ்திரம், ஆக்நேயாஸ்திரம், வாருணாஸ்திரம், வாயவ்யாஸ்திரம் முதலியவைகள். தீக்ஷையால் ஸங்கிரகிக்கப்பட்டு ஸித்திசெய்துகொண்டு பிரயோகிக்கத்தக்கவைகள். பிரயோக பாதத்தில் ஸேனைகளின் வ்யூஹம் முதலிய யுத்தமுறைகள் விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன.

காந்தர்வ சாஸ்திரம் என்பது என்ன?

ஈசுவரனை மகிழ்ந்து கொண்டாடி சித்தத்தை நிலையில் நிறுத்த ஆரம்பிக்கும் ஸுலபமான ஸாதனம் இது பாதமுனிவரால் செய்யப்பட்டது. இது கானம், வாத்யம், நாட்டியம் என பலபிரிவுகளுள்ளது. இதையறிந்து யாவரும் சந்தோஷிக்கலாம். இன்னும் இவற்றைப் பிரயோகிப்பதற்கு அதிகாரிகள் பாதபுத்திரர்கள் என்ற ஜாதியார். (இன்னும் வரும்.)

இந்துமதத்தின் பெருமையை விளக்கும்

சிற்சில திருஷ்டாந்தங்கள்.

இந்துமதாபிமானிகளான என்றன் சகோதரர்காள்! இவ்வுலகின்கண் பல்வேறுமதங்கள் ஆங்காங்கு அளாவி பற்பல பாஷைகளில் எழுதப்பெற்று அனேக ஆயிரக்கணக்கான ஜனங்களாலும் போற்றப்பட்டுவருகின்றதை நாம் கண்கூடாகப்பார்த்தும், சரித்திர மூலமாகப்படித்தும் அறிகின்றோம். பாரதநாட்டில் நீடூழி காலந்தொடங்கி பல இந்துக்களால் அநுஷ்டிக்கப்பட்டு வருவதும், சரித்திரஆராய்ச்சி நிபுணர்களால் கூட (Research-scholars) தெளிவாய் நிச்சயிக்கப்படாத காலநிர்ணயத்தையுடையதும் மற்ற மதங்கட்கெல்லாம் தாய்மதமென கொண்டாடக்கூடியதுமான மதம், நமது அநாதியான வேதத்தை ஆதியாகப் பெற்ற ஹிந்துமதமே. இத்தகைய இந்துமதத்தின் அழிவற்ற பெருமையை அதைப்போற்றும் இந்துக்கள் மாத்திரமல்ல, மற்றும் பல ஆங்கிலேய நிபுணர்களும் நன்கறிந்து அதைக்கொண்டாடியிருக்கின்றனர். அதற்கு அத்தாட்சியாக கி. பி. 17-ம் நூற்றுண்டினிறுதியில் விளங்கிவந்த ஆங்கிலராஜ்ய தந்திரநிபுணரும் வித்வானுமாகிய, ஸர் வில்லியம் டெம்பிள் (Sri William Temple) என்பவரின் வார்த்தைகளும் தற்காலத்தில் வசிக்கும், "பழமையின் அழிவின்மை" (The Living Past.) என்ற புத்தகத்திற்கு ஆசிரியரான "மார்வின்" (F S. Marvin) என்பவருடைய வசனங்களுமே, நம் மதத்தின் பெருமையை நன்கு விளக்கும். ஸர் வில்லியம் டெம்பிள் என்ற ஆங்கிலேய நிபுணர் தன்னால் எழுதப்பட்ட "புராதனக்கல்வியும் நூதனக்கல்வியும்" என்ற வியாஸத்தில் ("An Essay upon the Ancient and Modern Learning") இந்துக்களுடைய உயர்ந்த நாகரீகத்தையும், கல்வியையும், மதக்கோட்பாடுகளையும் பற்றி பின்வருமாறு எழுதுகின்றார்:—

"முன்காலத்து இந்தியப் பிராமணர்கள் பிறருடன் கலக்காமல் தனிவகுப்பாகவிருந்து கடவுள் வழிபாடுகளிலும், ஞானவொளியைப்புகட்டும் அறிய நூல்களைப் படிப்பதிலும், அரசர்களுடன் சேர்ந்து மந்திராலோசனை செய்வதிலும், அவர்கள் வாழ்நாட்களைக் கழித்துவந்தனர். இயற்கை நூலாகிய, பூகோளசாஸ்திரத்தில் பூமி உருண்டை வடிவென்றும், அது மிகுந்ததான காலாந்திர பரிமாணத்திற்குட்பட்ட ஆரம்பமும், முடிவையுமுடையதென்றும், அப்படிப்பட்ட இவ்வுலகத்துக்குக்காரணபூதமான பரம்பொருளின் சக்தியம்சமானது உலகிலுள்ள ஒவ்வொரு பாகங்களிலும் பாவியிருக்கிறதென்றும், முதல் முதல் அவர்களே அறிந்தனர். மேலும், நச்வரமான சரீரமே (Body) நாசத்தையடைகிறதென்றும் "ஆன்மா" (ஆங்கிலத்தில் (Soul) என்று சொல்லப்படும்) அழிவற்றதென்றும், அத்தகைய அழிவற்ற "ஆன்மா"வானது (Soul) ஒரு சரீரம் அழிவுற்றவுடன் மற்றொன்றை அவலம்பிக்கிறதென்றும் (ஆங்கிலத்தில் இது Transmigration of Souls என்று வ்யவகரிக்கப்படும்) அவர்கள் கண்டுபிடித்தனர். "பிளேட்டோ" (Plato) முதலிய "கிரீஸ்" (Greece) தேசத்து நிபுணர்கள் காலத்திற்கு முன்பே, சில இந்தியர்கள் தீய "நாகத்தின்" துன்பங்களைப் பற்றி வ்யவகரித்தனர். மேலும், மனோவியாகூலமே, பிணிமுதலியவைகளுக்கு முக்கிய காரணமென்றறிந்து, நடந்ததைப்பற்றி வ்யஸனத்தையும், வரப்போவதைப்பற்றிய சிந்தனைகளையும் அறவேயொழித்து, வாணுளை வீணுக்காமல் இன்பதுன்பங்களை சமமாகப்பாவித்து, மிகவும் சொற்ப ஆஹாரங்களாகிய, காய் கனிகளையும், அரிசி புல்பூண்டுகளையுமே புசித்து தங்களுக்கு நேரிடும் பல இடுக்கண்களையும் ஸகித்துக்கொண்டு, கடும் வெய்யிலிலும், நடு நிசியிலும், ஒற்றைக்காலால் நின்றுகொண்டும், கனத்த கற்களை கைகளிலேந்தியும் மற்றும் பலவிதமாகவும் கடவுளைக் குறித்துத் தவம் புரிவதில் தங்கள் தங்கள் காலத்தை கழித்தனர்" என்று எழுதுகின்றார்.

இவ்வளவு மேன்மையான நாகரீகம்பெற்ற இந்துக்களின் மதக்கொள்கையிலிருந்தே சிலவற்றை "பைத்தோகொரஸ்" (Pythogoras) பிளேட்டோ (Plato) எபிகூரஸ் (Epecurus) முதலிய கிரேக்கர்கள் கைப்பற்றிக் கொண்டார்களேயன்றி "எகிப்து" (Egypt) பாபிதோனியா (Babylonia) முதலிய தேசங்களிலிருந்ததில்லை என்பதையும் டெம்பிள் (Sir William Temple) நன்குபுகட்டியுள்ளார். ஆனால், கிறிஸ்து ஜனனத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், நாகரீகத்தில் மிகவும் முன்னேற்றமடைந்தவையெனக் கொண்டாடப்படும் "எகிப்து"(Egypt) "பாபிலோனியா" (Babylonia) என்ற இவ்விருதேசங்களுமே தங்கள் மதக்கோட்பாடுகள் சிலவற்றை இந்துக்களிடமிருந்து அனுசரித்ததாக அனுமானிப்பதற்குத் தகுந்த பல ஆதாரங்கள் உள. இதையே "பழமையின் அறிவின்மை" (The Living Past) என்ற நூலின் ஆசிரியரும், தற்காலத்து நவீனநிபுணருமாகிய "மார்வின்" (F. S. Marvin) என்பவர் உலகின் முன்னேற்றத்தைப் (World Progress) பற்றிப் பேசுங்காலத்து, மெடிடரேனிய கடற்கரையிலுதித்த முதல் அரசாங்கங்கள் (Early Empires of the Mediterranean) என்று சொல்லக்கூடிய, "எகிப்து" "பாபிலோனியா"வாகிற இருதேசங்களுமே இதற்கும் முந்தினதும், உயர்ந்த நாகரீக நாடென விளங்கி வந்ததுமான இந்தியாவின் மதக்கோட்பாடுகளை அனுஷ்டித்து வந்தனவென்று ஊகிப்பதற்கு இடமிருக்கிறதென்றும், அதைப் பற்றி விவரிப்பதற்கு தனக்குப்போதுமான அவகாசமும், சக்தியுமில்லையென்றும், நன்கு வெளியிட்டிருக்கின்றார். எனினும், அவர்களுடைய அரசாங்க முறைமையை யோசிக்குமளவில் அவர்கள் நமது புராதன இந்துக்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறார்களென்று நன்கு தெரியவருகின்றது. நாடுகளையாளுகின்ற செங்கோல் மன்னர்களுக்கும், மற்ற மேலுலகங்களுக்கதிபதிகளான தேவர்களுக்கும் ஒற்றுமையிருக்கிறதென்ற அவர்கள் அரசியல் கொள்கையானது (இது ஆங்கிலத்தில் "Primi-

tive Theocracy " என்று சொல்லப்படும்), **"नाविष्णुः पृथिवी-पातिः"** என்ற வேதத்தின் கருத்தை யுத்கோஷிக்கும் மனுஸ்மிருதியின் கொள்கையை யனுஸரித்ததேயாகும். இதுவுமன்றி பூமி. சூரியன் சந்திரன் முதலியவைகளின் உபாஸனைகளும், இந்துமதக் கோட்பாடுகளென்பதற்கு, ருக்வேதத்தில் இக்கிரஹங்களைப்பற்றி ஸ்தோத்திரம் செய்யும் ருக்குகளே தகுந்த அத்தாட்சியாகும். இதுமாத்திரமல்ல, மதத்தையே பிரா தானமாகக்கொண்ட எகிப்து தேசத்தின் அரசாங்கமுறைமையும், இந்துக்களிடமிருந்தே அவர்களால் கிருகிக்கப்பட்டிருக்கவேண்டும்; ஏனெனில் மதக்கோட்பாடுகளையே முதன்மையாகவும் இன்றியமையாததாகவும் கொண்டு அதற்காக முதன்முதல் பாடுபட்ட நாடு இந்தியநாடே.

இவ்வாறு கிரேக்கர் மதத்திற்கும், எகிப்து மதக்கொள்கைகளுக்கும் வெகுவாகவுதவியிருக்கும் நமது புராதனமான இந்துமதம் தற்காலம் எங்கும் பரவிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ மதத்திற்கும், எவ்வாறு உதவிபுரிந்திருக்கின்ற தென்பதையும், அதைவிட எவ்வித உத்தமமான கொள்கைகள் அடங்கியுள்ள தென்பதையும் அறிவதற்கு கிருஸ்துவேதமான பைபிலை(Bible)யும், நம் ஆன்றோர்களால் கொண்டாடப்பட்டு தலைமுறை தலைமுறையாக மனப்பாடமாகப் போற்றிவரும் வேதத்தையும் சீர்தூக்கி ஆராய்வோம்.

(இன்னும் வரும்)

இந்து மதாபிமானி.

ஆசாரமே முதல் தருமம்.

———o———

(உ०அவது பக்கத்தொடர்ச்சி.)

பழையதும் புதிதுமான பல காரணங்கள்கூடி, நம்மவருள் அனேகமாயிரம் கிரகஸ்தரைக் குடும்பவிருத்தி விஷயத்திலும், விவாக விஷயத்திலும் சிரத்தை குறையும்படி செய்துவந்திருக்கிறது. அதற்கு ஒருவகையாகச் சாக்ஷியம் காணலாம். அதாவது, மக்கள் சங்கியை வருஷவாரியாகக் குறைந்துவருவதாம்.

தருணர்களும் தருணிகளுமான நமது குமார ஜனங்கள் படித்துவரும் புஸ்தகவகைகள் வெகுமோசமானவை—இப்படிப்பட்ட சாக்குகளை இவ்வளவுமலிவாக எங்கும் சஞ்சரிக்கச்செய்வது எந்த நியாயங்கொண்டும் சரியன்று. என்றாலும், இந்தப் புஸ்தகப்போலிகள் எங்கும் காணக்கூடியனவாகி, குமார ஜனங்களுடைய மனதைப் பொடிபோட்டுமயக்கி, இதுவரையில்லாத விதமாக விஷமூட்டிவருகிறது. இந்தத் தோஷத்தை நாம் பரிகரிப்பது சாத்தியமாகவிருக்க, நாம் அதைமறந்து எக்கேடோ கெட்டுமென்றிருந்தால், அதனால் விளையக்கூடிய பிரமாதங்கள் இவ்வளவென்றில்லை. அதற்கெல்லாம் நாமே ஜவாபுதாராக வேண்டும்.

ஆதலால் நாம் பள்ளிக்கூடங்களில் இதுவரை செய்துவந்த மாதிரி அசிரத்தையாயிராமல், விவாகாதி விஷயங்களில் நமது குமாரருக்கு நல்ல புத்தி, விவேகம், சௌசம் முதலிய லக்ஷணங்கள் கூடும்படி உபதேசித்து, உலகத்தில் ஜனங்கள் விவாகஞ் செய்துகொண்டு, அனுகூல தம்பதிகளாகயிருந்து, சற்புத்திரரைப் பெறுவது அந்தந்தத்தம்பதிகளுக்கு மட்டுமே உபகாரமல்லவென்றும், அதனால் நாம் தேசத்திற்கும், மகாஜன சமூகத்திற்கும் செய்யக்கூடியதைவிடச் சிறந்த உபகாரமில்லையென்றும் வற்புறுத்தி வரவேண்டும். (அதாவது, ஹிந்து சம்பிரதா

யப்படி விவாகம், மக்கட்பேறு முதலியன வெறுங்காம்மிய் விஷயமட்டுமேயன்று, அவை யனைத்தும் யக்ஞ வகைகளென்பதாம்.)

காமம், கொலை, களவு, குடி முதலிய அவலக்ஷணங்கள் நிறைந்துள்ள தம்பதிகள் பிள்ளைகளைப் பெற்றால், அந்த வமிசத்தில் அவ்வித அவலக்ஷணங்கள் கூடுமேயொழியக் குறையாது. ஆதலால் தான் நம்மவருள் இவ்வகைக்கூட்டம் பெருத்து, தேசத்திற்கே தீங்கிழைத்து வருகிறது. இவைகளெல்லாம் ஓர் வகை நோய்களாதலால், சிறு வயதிலேயே ஆண் பெண் இரு திறத்தாருக்கும் இந்நோய்களுக்குத் தக்க பரிகாரம் தேட வேண்டுவது விவேகிகளுடைய கடமையாம். இல்லாவிட்டால் நமது மகாஜனங்களுடைய சுபகுணங்கள் க்ஷீணித்து வமிசக்ஷயமுங்கூடுவது நிச்சயம்.

ஆதலால் "விவாஹ விஷயம் ஈசுவரசம்மதமான சம்ஸ்காரமென்றும், தம்பதிகள் மக்கட்பேறு பெற்றுச் சுகிப்பது புண்ணியம் புருஷார்த்தமிரண்டும் தருவதென்றும், குடி முதலிய அவலக்ஷணங்களைக்குறைப்பது விவேகிகள் மேற்கொண்டு நடத்தவேண்டிய தருமமென்றும், நாம்எங்கும் பிரசுரித்து, எல்லோருக்கும் உபதேசித்துவர வேண்டியவர்களாகிறோம். விவேகிகளறிந்து முயல்வாராக" என்று.

நமது நாட்டில் விவாக விஷயமாய்ப் பேசுபவர், எழுதுபவர் அனைவரும் இதைக் கவனித்துப் பேசுவாராக. ஆனால் பதுமைக் கல்யாணம் முதலிய அவலக்ஷணங்களுக்கு இதனால் ஒரு பலமுமேற்படாதென்பது அபிமானிகளுக்கு எளிதில் விளங்கும். இது சம்பந்தமாக ஸ்ரீமான் யக்ஞநாராயண அய்யர் முன்னிரண்டு நெம்பரில் 'வாசுல்கம்' என்ற மகுடத்துடன் எழுதியதையும் கவனிக்கவேண்டுகிறோம்.

ஆசாரியனும் தேவனும்.

ஆர்யர்களே ! நம் ஆர்யதேசத்திலமைந்துள்ள அநேக வைபவங்களுக்கு முதற்காரணமும் பிராணிகளுக்கு அழிவற்ற சுகத்தைக் கொடுப்பதுமான மார்க்கங்களுள் வேதசாஸ்திரமார்க்கமொன்றே முதற்படியிலுள்ளதென்ன நாம் ஏற்றுக்கொள்வதுபோல் புறமதஸ்தர்களும் தங்களது வேதம் சொல்லியதிற் குற்றமுளதென்று ஒப்புக்கொள்ளவே மாட்டார்களென்பது யாவருமறிந்ததே. அத்தகைய நம் வேதம் முதலில் நமக்கு எதைக்கற்பிக்கிறதெனின் குழந்தையாய்ப் பிறந்து மழலைச் சொற் சொல்லும்போதே அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம் என்று கற்பித்தது. ஏனெனில், கண்விழித்தவுடன்குழந்தை முதலில் தாயின் திருமுகத்தையே பார்க்கும். ஸ்தன்யபானம் செய்யும்போதும் அன்னையின் புன்னகைமுகத்தையே நோக்கி நகைக்கும். அன்னையின் வார்த்தையையே முதலிற் கேட்கும். அதுகொண்டே "அன்னையும்" என்று முதலில் கூறப்பெற்றது. பிறகு தகப்பனை நாள்பட்டுத்தான் தெரிந்துகொள்ளும். அன்னையிடமிருந்தே அம்மாவென்று சொல்லென்ற உபதேசத்தை முதலிற்பெறும். அவள் மூலம்தான் அப்பாவென்ற பதத்தின் உபதேசத்தையும் அடைகிறதாதல்பற்றி பிதா பின் கூறப்பட்டனர். ஔவையும் இவ்வாக்கியத்தை, வேதவாக்கியத்தையே பாஷைமாற்றிச் சொன்னாளென்பது யாவருக்கும் தெரியும். வேதத்தில் மாதாவை தெய்வமாகக் கொள் பிதாவை தெய்வமாகக்கொள் என்ற கிரமம் தானிருக்கிறது. இதற்குப் பிறகு ஆசாரியனை தெய்வமாகக் கொள் என்றொரு வாக்கியமுண்டு. இதைத்தான் இங்கு முக்கியமாய் கவனிக்கவேண்டும். அதாவது ஆசார்யனென்று ஒருவர் இருக்கிறார். அவரை தெய்வமாய் நினை என்கிறது. இங்கு முதலில் ஆசார்யர் இன்னாரென்று தெரிந்துகொள்ளவேண்டும். தெய்வம் இன்னதென்று தெரிந்துகொண்டு இரண்டையும் ஒன்றாய்ப் பார்க்கவேண்டும். ஆனால்

ஏற்படும் உபயோகம் தெரியவேண்டும். ஆகையால் முதலில் ஆசார்யரென்ற பதத்தை கவனிப்பாம். பொதுவாய் ஆசார்யரென்றால் ஸ்தூலமாய் குரு உபாத்தியாயர் என்றபதம் போல் அதுவும் ஒன்று தானென்பது மட்டிலுமறியப்பட்டிருந்தபோதிலும் அதுமாத்திரம் போதாது. இன்னும் கொஞ்சம் விசாரிப்போம். ஆசார்யரென்றால்,

आचिनोति हि शास्त्रार्थानाचरे स्थापयत्यपि ।
स्वयमाचरते यस्मात्तस्मादाचार्य उच्यते ॥

சாஸ்திரத்தின் அர்த்தங்களை உலகில் விஸ்தரித்து ஜனங்களை ஆசாரத்தில் ஸ்தாபித்துத் தானும் அவ்விதம் நடந்துகொண்டிருப்பவர் ஆசார்யரெனப்படுவார் என்று கூறுகின்றது. இப்பதத்தின் அர்த்தப்படிப்பார்த்தால் முன் கூறியபடி உபாத்தியாயர் குருமுதலிய பதங்கள் கூட கொஞ்சம் இப்பதத்தை விட்டு விலகும். ஆதல்பற்றியே தர்மசாஸ்திரகாரரும்,

स गुरुर्यः क्रियाः कृत्वा वेद मध्यापये त्स्वयं ।

எவன் உபநயனம்முதலிய ஸம்ஸ்காரம் செய்துவைத்து வேதத்தைக்கற்பிக்கிறானே அவன் குருவென்றார். மற்றோரிடத்திலும்,

उपाध्यायादृशाचार्य आचार्याणां शतं पिता ।
सहस्रं तु पितुर्माता गौरवेणातिरिच्यते ॥

உபாத்தியாயரைக் காட்டிலும் ஆசார்யர் பத்துமடங்கு உயர்ந்தவர். ஆசார்யனைக்காட்டினும் நூறு மடங்கு தகப்பன் உயர்ந்தவர். தகப்பனைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு தாய் உயர்ந்தவள் என்கிறார். ஆகவே இவ்வசனங்களால் ஆசார்யர், குரு, உபாத்தியாயர் என்பவர் கார்யங்களால் கொஞ்சம் கொஞ்சம் வித்தியாஸமடைகிறார்கள். ஆகையால் இப்போது ஆசார்யரை மட்டும் விசாரித்தால் பொதுவாய் முதலிற்கூறிய லக்ஷணப்படி லோகத்தில் சாஸ்திரமார்க்கத்தைப் பரவச் செய்துகொண்டு தானுமனுஷ்டித்து உலகத்தையே முன்னுக்குக் கொண்டுவரவேண்டியதே நம்முடைய கடமையென்றெண்ணி உலக

முழுமையும் சுற்றி அலேந்துகொண்டு ஸம்ஸாரக்கடலில் ஆழ்ந்து மூழ்கித் தத்தளித்து அதையே சுகமென்று கொண்டிருக்கும் நமதிருப்பிடம் வந்து தரிசனம் தந்து வேதமார்க்கத்தை உப தேசித்து நல்வழிப்படுத்துபவரே ஆசார்யர். இப்பதம் யாருக்கும் வாய்க்காது. சங்கரபகவத்பாதாசார்யர், ராமானுஜா சார்யர், மத்வாசார்யார், நீலகண்ட சிவாசார்யர் என்று இவர்களுக்குத்தான் அப்பெயர் வாய்ந்தது. இவர்கள் எவ்விதம் நடந்துகொண்டிருந்தார்களென்பதை நாம் அவர்கள் உபதேசப்படி நடந்துகொண்டிருப்பதே விளக்கும். ஆயினும் அவர்கள் நமக்காகப்பட்டிருக்கும் கஷ்டங்களே அவர்களது திவ்ய சரித்திரங்களையும் அவர்களாலியற்றப்பட்ட க்ரந்தராசிகளையும் பார்த்தாலே நன்கு விளங்கும். இப்பரமாசார்யர்கள் ஆதியில் உண்டாய் அவர்கள் லோகத்தைவிட்டு விலகுமுன்னர் தனது முக்கியமான சிஷ்யரைத் தனக்குப் ப்ரதிநிதியாய் வைத்து உலகத்திற்குத் தான்செய்த கார்யத்தையே செய்யும்படியும் அப்படி அனுஷ்டிப்பவர்களுக்கு யாதொரு தீங்கும் உண்டாகாமலிருக்கும்படி பாதுகாப்பதற்கும் பகவத்பாதாசார்யர் தான் கைலேயிலிருந்து கொண்டுவந்த திவ்யலிங்கத்தையும் தான்ஸ்தாபித்த சாரதா காமகோடிமுதலிய பீடத்தையும் அவர்களிடமே ஒப்பிவித்தும் தன் ஸ்தூலதேஹத்தை மறைத்துக்கொண்டனர். இப்பரமாசார்யர் கைலேக்கு ஸ்வதந்திரமாய்ச் சென்றதும், சாரதையைப் பிரத்யக்ஷமாய்க் கட்டில் நிறுத்தியதும் ஓர் வேதியமாதுக்காகத் தன் குழந்தைப் பருவத்திலேயே லக்ஷ்மியைப் பிரத்யக்ஷமாய்த் தருவித்து ஏராளமாய்த் தங்கக் குவியலைக் கொடுக்கச்செய்ததும் தன் உடலைவிட்டு வேறு அரசனின் உடலிற்புகுந்ததும் பிறகு சிடர்களது பாட்டைக்கேட்டதும், அவ்வுடலைவிட்டுப் பக்ஷிபோற் பறந்து சிதையில் எரியும் தன்னுடலைப் பற்றியதும் பற்றி எரிந்துகொண்டிருந்த தன் சரீரத்தை உடனே லக்ஷ்மீநரஸிம்மனது பிரத்யக்ஷத்தால் திவ்யதேகமாக்கிக்கொண்டதும் ஸர்வக்ஞபீடாதிரோஹணம் செய்ததும் இன்னும் அனேக அமானுஷகிருத்யம் செய்ததும் இம்மகான் ஈசன் தானென்று ஐயமுறவிளங்குகிறதல்லவா. (இன்னும் வரும்.)

எம். என். சுப்பிரமணிய சாஸ்திரி.

ஸநாதன தர்மஸம்ரக்ஷண ஸம்மேளனம்.

ஆஸ்திக சிகாமணிகளே! மிகப்பிராசீனமான ஸநாதன தர்மம் என்கிற நமது ஹிந்துமதமும் வேதசாஸ்திராதி நிபந்தனைக் கிரந்தங்களும் ஸம்பிரதாயங்களும் அநேக யுககாலமாக சிதைவற்று இருந்துவருகின்றன. முஹம்மதிய அரசர்கள்கூட நமது நாட்டில் வந்துவசிக்க ஆரம்பித்தபின்பு நமது மதாசார சம்பிரதாயங்களை அபிமானித்து நம்முடன் ஒற்றுவாழத் தலைப்பட்டார்கள். அன்றியும் மதஸம்பந்தமான ஸ்தாபனங்களுக்கு ஹிந்து அரசர்களால் ஏற்பட்டிருந்த மான்யங்களை ஊர்ஜிதம் செய்ததுமன்றி தாங்களும் ஏராளமான மான்யங்கள் கொடுத்துவந்தார்கள். ஹிந்து அரசர்களுக்கும் முஹம்மதிய அரசர்களுக்கும் அடுத்தபடியாய் வந்த ஆங்கிலேய ஜாதியாரும் பார்லிமெண்டு என்கிற அவர்களது மஹா சபையைக்கொண்டும் அரசர்களைக்கொண்டும் தங்களது சட்டமூலமாயும் இராஜாதிகாரத்தின் பலத்தால் பிறக்கும் இஸ்தியார்களாலும் நமதுதேசத்திலுள்ள பிரஜைகளின் மதங்கள் ஜாதி ஆசாரங்கள் இவைகள் சம்பந்தமான விஷயங்களில் மத்தியஸ்த நிலைமையை விடுவதில்லையென்றும் அவைகளை பாதுகாக்க ஏற்பட்டிருக்கும் சாஸ்திரங்கள், மாமூல்கள் கோஷ்டிகள் இவைகளை நிஷ்பக்ஷபாதமாய் அபிமானித்து வருவதாயும ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதமே சக்ரவர்த்தினி விக்டோரியா மஹாராணி அவர்களுடைய வாழ்க்கையும் அவர்களுக்குப் பின் ஆட்சிக்குப்பின் சக்ரவர்த்திகளின் உறுதிமொழிகளையும் பூர்ணமாய் நம்பி ஹிந்துக்கள் மிகுந்த இராஜவிசுவாஸத்துடன் நடந்துவந்து ராஷ்டிர மண்டலத்தின் நன்மைக்காக மகா யுத்தங்களிலும் சேர்ந்து போர்செய்து தங்களுடைய பொருள் ஆவி இவைகளை மனப்பூர்வமாய் செலவிட்டு கைங்கர்யம் செய்துவந்திருக்கின்றார்கள்.

இராஜ்ய நடவடிக்கையின் முறையில் சீர்திருத்தங்கள் என்கிற மாற்றங்கள் ஸமீபகாலத்தில் ஏற்பட, இந்துக்கள் தங்களது தேசத்தின் க்ஷேமலாபங்களை பாதுகாத்துக்கொள்வதற்கும் அதிலும் விசேஷமாய் ஜாதிமதாசார விஷயங்களைக் காக்க

வும் முன்னிருந்ததைக் காட்டிலும் மகாஜனங்களுக்கு ஜாஸ்தி யான பொறுப்புகளுடன் ஸ்வராஜ்யம் வந்துவிடப்போவதாய் நினைத்தார்கள். ஆனால் வாஸ்தவத்தில் சென்னை இராஜதானி யின் அரசாட்சி முறையில் ஏற்பட்டிருக்கும் வழிகளைப் பற்றி விவரிக்கப் புகுந்தால் மிகுந்த துக்கமுண்டாகிறது. தேவஸ்வம் தர்மஸ்வம் இவைகள் ஸம்பந்தமாய் இப்பொழுது சென்னை இராஜாங்கத்தார் ஒரு புதுசட்டத்தை ஏற்படுத்தி தாங்கள் மதவிஷயங்களில் பாராட்டவேண்டிய மத்யஸ்த நிலைமையை மனப்பூர்வமாயும் முற்றிலும் மறந்து இந்துக்களும் அவர்களு டைய மடாதிபதிகளும் ஏகமனஸாய் சொல்லிவரும் ஆக்ஷேப ணைகளைச் சற்றேனும் பாராட்டாமல் தேவாலயங்கள் மடால யங்கள் முதலிய தர்மஸ்தாபனங்களின் நடவடிக்கைகளிலும் தலையிட்டுக்கொண்டு விட்டார்கள். இப்பொழுதிய சென்னை இராஜாங்கக் கக்ஷியார் இராஜ்யபரிபாலன முறையில் சீர்திருத் தம் செய்வதாய் சொல்லிக்கொண்டு தங்களுக்குள்ள மெஜாரி டியின் பலத்தால் சிரேஷ்டமான நமது மதத்தையும் தேவால யங்களையும் மடங்களையும் சீர்குலைக்கத் தொடங்கி விட்டார்கள். நமது ஜாதி யாசாரங்கள் தர்மங்கள் இவைகளை ரக்ஷிக்க ஏற் பட்டு வெகுகாலமாய் அனுஷ்டானத்தில் இருந்துவரும் தர்ம சாஸ்திரங்களையும் தூர்த்தம் செய்யத்தலைப்பட்டார்கள்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் அவர்களுடைய ஹிருதயத் தில் இந்துக்களாகிய நம்எல்லோருக்கும் அதிலும் விசேஷமாய் அந்தமடத்தின் சிஷ்யர்களுக்கும் நேரிட்டிருக்கும் ஆபத்தைப் பற்றி மிகுந்த அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஜம்புகேச்வ ரக்ஷேத்திரத்தில் விளங்கும் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்பாளின் தாடங்க பிரதிஷ்டா மகோத்ஸவ காலமாகிய ஏப்பிரல்-மீ 29- தேதிக்குப் பின் இந்துக்களின் ஸம்மேளனம் ஒன்று ஏற்பட வேண்டுமென்றும் அதில் ஆஸ்திகர்களான இந்துக்களுக்கு உயி ருக்குச் சமானமான அபிமானபாத்திரமாகிய மதம், ஆசாரம், ஜாதி இவைகளின் தர்மங்கள் முதலிய முக்கியாம்சங்களை விஸ் தாரமாய் எடுத்துப்பேசி நிபந்தனைகள் செய்து மதாசாரஸம்

ரக்ஷணம் செய்யவேண்டியது அத்யாவசியமென்பது மஹா ஸ்வாமிகளின் அபிப்ராயமும் அபிலாஷையுமாய் இருக்கிறது.

இந்த தர்மரக்ஷண ஸம்பந்தமான முயற்சியில் இந்துக்களி லுள்ள இதர ஸம்ப்ரதாய ஸம்ரக்ஷகர்களான ஆசார்யர்களின் உத்ஸாஹமும் ஸஹாயமும் அவசியமானதால் அவ்வித மடாதி பதிகள் தேவாலய மடாலய தர்மகர்த்தர்கள் பிரதிநிதிகள் எல் லோரும் அந்த சந்தர்ப்பத்தில் விஜயஞ்செய்து வந்திருந்து கலியுகத்தில் சங்கங்களின் சக்தியே பெரிது என்கிறதற்கு நிதர்சனமாயும் நமது ஐகமத்யத்திற்கு அறிகுறியாயும் நமக்கு ஸர்வஸாமான்யமாய் ஏற்பட்டிருக்கும் இந்த ஆபத்தை விலக்க வேண்டிய மஹாஸ்வாமிகளுக்கு ஏற்பட்டிருக்கும் உத்தேசத் தைப் பரிபூர்த்தி செய்துகொடுக்கவேணுமாய் மிகுந்த ஆதர வுடன் இந்த பிரார்த்தனுபத்திரிகை அனுப்பப்பட்டிருக்கிறது. ஸ்ரீ அம்பாளின் கிருபையால் இந்த உத்தேசப்படி ஸம்மேள னம் ஏற்படுமானல் இந்துமத ஜீர்ணோத்தாரண முயற்சியில் இது ஒரு அபூர்வமும் முக்யமுமான ஸம்பவமாகும் என்பதில் ஸம்சய மில்லை. அதனல் ஆத்மரக்ஷையும் சாந்தியும் ஐகமத்யமும் ஏற் படுவதற்குத் தடையில்லை. ஸம்மேளனம் ஜம்புகேச்வரம் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் மடத்தில் ருத்ரோத்காரி-ஹு சித்தி ரை-மீ 19-வுக்கு (2—5—23) புதன்கிழமை பகல் 4-மணிமுதல் பிரதிதினமும் நடைபெறும். ஆசார்ய புருஷர்களும் பண்டித சிரேஷ்டர்களும் தேவாலயங்கள் மதஸம்பந்தமான ஸபைக ளின் பிரதிநிதிகள் ஸம்மேளனங்களுக்கு அத்யக்ஷர்களாகவிற் றிருப்பார்கள். ஸம்மேளனத்திற்கு பிரதிநிதிகளாகவும், அப்யா கதர்களாகவும் வருகிறவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுக்கப்படும். அவ்வித சௌகரியம் வேண்டியவர் கள் திருச்சினுப்பள்ளிக்கு அடுத்த திருவானைக்காவல் வடக்கு வீதி ஸ்ரீ ஜகத்குரு மடத்திலிருக்கும் மானேஜருக்கு எழுதி தெரிவித்துக்கொள்ளவேண்டுமென்று கோறப்படுகிறது.

ஸ்ரீசங்கராசாரியார்ஸ்வாமிகள் மடம், கும்பகோணம். } கி. குப்புஸாமி அய்யர்.
ஸ்ரீ மடம் ஸ்ரீகார்யம்